நம் நாடு

தி.மு.க. தின இதழ்   ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: மார்கழி 26உ திங்கள் (10-1-55) ★ ★ வெளியீடு: மார்கழி 27உ செவ்வாய் (11—1—55) [இதழ் 180

லக்னோ நகர மகளிர் புரட்சி!

தனித்து வாழ உரிமை வேண்டுமாம்!

மணமானவர்களும், மணமாகக்கூடியவர்களும் அடங்கிய 1,500 பெண்கள், தாங்கள், தங்கள் கணவர்களிடமிருந்தும், சுற்றத்தார்களிடமிருந்தும் தனித்து வாழ்வதற்கான உரிமை வேண்டுமென அனுமதி கோரி சென்ற ஆண்டில், லட்சுமணபுரியிலுள்ள நகர மாஜிஸ்திரேட்டிடம் மனுச் செய்துகொண்டனர்.

இவ்வாறு மனுச் செய்துகொண்ட பெண்களில் பெரும்பாலோர் கீழ்த்தர வகுப்பைச் சேர்ந்தவர்களெனவும், அவர்கள் கோரிக்கைப்படி உரிமை கொடுக்க மாஜிஸ்திரேட்டுக்கு அதிகாரமில்லாமையாலும் அம்மனுக்களையெல்லாம் 'பைல்' செய்துவிடும்படி அம்மாஜிஸ்திரேட் உத்தரவிட்டுள்ளார் என்றும் தெரிகிறது.

'உயர்நிலைப்பள்ளிகளை திறக்காதே'

'பொதுமக்கள்தான் அப்பொறுப்பை ஏற்க வேண்டும்'

உள்ளாட்சி மன்றங்களுக்கு அரசாங்கக் கட்டளை

"உயர்நிலைக் கல்வியைப் பெருக்க வேண்டிய பொறுப்பு உள்ளாட்சி மன்றங்களையும், தனி நபர்களையும் சேர்ந்ததாகும் என்பதுதான் அரசாங்கத்தின் கொள்கையாக இருந்து வருகிறது. இருந்தாலும் உள்ளாட்சிமன்றங்களைப் பொறுத்தவரையில், தம்மிடமுள்ள பண வசதியை சிறந்த பயனளிக்கும் வகையில் செலவிட வேண்டுமென்பதால், உயர்நிலைப் பள்ளிகளைத் துவங்கும் தனி நபர் முயற்சியுடன், மேற்படி மன்றங்கள் போட்டியிடுவது கூடாது என அரசாங்கம் கருதுகிறது."

அண்மையில் சென்னை அரசாங்கம் மேற்கூறிய வகையில் கட்டளை ஒன்றை இட்டிருக்கிறது.

தன்னுடைய எல்லைக்குள் தொடக்கக் கல்விக்கு ஏற்பாடு செய்வதுதான் ஒரு உள்ளாட்சி மன்றத்தின் முக்கிய கடமையாகும். எனவே, ஏற்கனவே அரசாங்கம் இட்ட கட்டளைக்கிணங்க, ஊராட்சி மன்றங்கள்—குறிப்பாக மாவட்டக் கழகங்கள், உயர்நிலைப் பள்ளியை விரிவாக்கும் முயற்சியை விடுத்து, தொடக்கக் கல்வியை விரிவுபடுத்தவும், அதைச் சிறப்புள்ளதாக மாற்றி அமைக்கவும் முனைய வேண்டும்.

புதிய உயர்நிலைப் பள்ளிகளைத் துவங்கவும், இருக்கும் பள்ளிகளின் வகுப்பு எண்ணிக்கையைக் கூட்டவும், பொதுமக்களிடமிருந்து எவ்வளவு தொகைகளைப் பெற்று ஊராட்சி மன்றங்கள் அத்துறைகளில் முயற்சிக்க வேண்டும் என்பதற்கான விளக்கம் அரசாங்கக் கட்டளையில் தரப்பட்டிருக்கிறது:—

ஒரு உயர்நிலைப் பள்ளிக்காக தேவைப்படும் ஒரு கட்டிடம் அல்லது ரொக்கமாக ரூ. 50,000, ஒரு நடுநிலைப் பள்ளிக்கு ரூ.30,000 என்ற முறையில் ஊராட்சி மன்றம் முன்பணமாக அவ்வப்பகுதி மக்களிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். வகுப்புகளின் எண்ணிக்கையைக் கூட்டுவதற்கு ரூ. 20,000 முன்பணமாகப் பெற வேண்டும். நிரந்தரமாக ஒரு கட்டிடத்தை கட்டித்தர அப்பகுதி மக்களிடம் உறுதி பெற்றுக்கொள்ளப்பட்டாலொழிய, தற்காலிகக் கட்டிடத்தை ஒப்புக்கொள்ளக்கூடாது.

பாதுகாப்பிற்கான, தொடர் செலவிற்காக, ரூ. 6,600, ரூ. 3,200, ரூ 1,600 என்ற விகிதத்தில் முறையே நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, புதிய உயர் வகுப்புகளுக்காக முன்பணமாக, அப்பகுதி மக்களிடமிருந்து முன்கூட்டியே உள்ளாட்சி மன்றங்கள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

மற்றப் பள்ளிக்கூடத் தேவைகளை, தங்கள் பொது நிதியிலிருந்து உள்ளாட்சி மன்றங்கள் ஈடுசெய்துகொள்ள வேண்டும். அரசாங்கத்துடையவும், உள்ளாட்சி மன்றங்களினுடையவும் சொந்த நிலம் இருக்குமானால், அந்நிலத்தை, பள்ளிக் கட்டிடங்களுக்கும், விளையாட்டு அரங்குகளுக்கும் உள்ளாட்சி மன்றங்கள் சாத்தியமான வகையில் இனமாக வழங்கலாம். அப்படி இல்லையானால் இடத்தைப் பெறும் செலவு, பொதுமக்களால் தான் ஈடு செய்துகொள்ளப்பட வேண்டும்.

6-கோடி மூட்டை நெல் விளைவு

அதிகாரிகள் எச்சரிக்கை

ஆந்திர மாநிலத்தில், இவ்வாண்டில் 6 கோடி மூட்டை நெல் விளையலாம் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறதாம். இரண்டாவது உலக மகா யுத்தத்திற்குப் பின்னர், சென்ற ஆண்டில்தான் அதிக விளைச்சல் கண்டுள்ளது. ஆந்திராவில் சென்ற ஆண்டில் 5 கோடி 60 லட்சம் மூட்டை நெல் விளைந்தது குறிப்பிடத்தக்கது.

விலைவாசிகளையெல்லாம் உன்னிப்பாகக் கவனித்துக் கொள்ள வேண்டுமெனவும், விலைவாசிகள் சரிவதை உடனுக்குடன் சர்க்காருக்குத் தெரிவிக்க வேண்டுமெனவும், எல்லா மாவட்ட கலெக்டர்களும் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்களாம்.

நியமனம்

இந்திய சர்க்கார் மத்திய கல்வி ஆலோசனைக் குழுவிற்கு, திரு. டி. என். அவினாசிலிங்கம் அவர்கள் ஒரு உறுப்பினராக நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர் மூன்றாண்டுக் காலம் அக்குழு உறுப்பினராக இருப்பார்.

ஹோசிமின் நண்பர்கள்

பிரெஞ்சு சர்க்காரிடம் தஞ்சம் அடைந்துள்ளார்களாம்

வியட்மின் அதிகாரிகள் இரண்டு பேர், பிரெஞ்சு சர்க்கார் அதிகாரிகளிடம் ஹைபோங்கில் தஞ்சம் அடைந்துவிட்டனர் என்று சொல்லப்படுகிறது. இந்த இரண்டு பேரில் ஒரு அதிகாரி வியட்மின் அதிபர் ஹோசிமினுடைய நெருங்கிய நண்பர்என சொல்லப்படுகிறது.

ஹனோய் மேயரான டாக்டர் டிரான் வான்-லாய், டிரின்குவாங் என்ற இரு அதிகாரிகளும் இப்போது பிரெஞ்சுக்காரர்களிடம் தஞ்சமடைந்திருக்கிறார்களாம்.

டிரின்குவாங் என்பவர் ஜினிவா மாநாட்டில் வியட்மின் தூதுக்குழுவின் உறுப்பினர்.

இந்தியாவின் சட்டசபைகள் 'ரப்பர் ஸ்டாம்பு'களைப் போன்றவை!

சர்க்கார் திட்டங்களுக்கெல்லாம் 'ஆமாம்' போடுகின்றன!

பம்பாய் சட்ட சபைத் தலைவர் கருத்து

இந்தியாவிலுள்ள சட்டசபைகள் 'ரப்பர் ஸ்டாம்பு'கள் போன்று உள்ளன; நிர்வாகத்தில் இருப்போர், அவைகளின் முன்பு எந்தத் திட்டத்தை வைத்தாலும், அவைகளுக்கு 'ஆமாம்' போட்டு அப்படியே ஒப்புக்கொள்ளுகின்றன,"

—என்று, பம்பாய் சட்டசபையின் தலைவர் பி. கே. குந்தே, அலகாபாத்தில் உள்ள ஹரோல்ட்லாஸ்கி நிலையத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

"தனி நபர்கள் அனுப்பும் மசோதாக்களை சர்க்கார், சட்ட சபைத் தலைவருடன் கலக்காமலே கெஜட்டில் பிரசுரித்து விடுகின்றனர். பின்னர் அந்த மசோதாக்களை சபையில் பிரரேபிக்க, உறுப்பினர்கள், சபையின் அனுமதியைப் பெறவேண்டியிருக்கிறது. அனுமதி கிடைத்தால் சபையின் அடுத்த கூட்டத்திற்கு இந்த மசோதா ஒத்திப் போடப்படுகிறது."

"இதுபோல் சர்க்காரின் அனுமதியில்லாமல் வரி விதிப்பு சம்பந்தமாக தனி நபர்கள் எந்த மசோதாவையும் கொண்டு வர முடியாது. இவற்றைப் பார்க்கும்போது, சட்டசபைகள் 'ரப்பர் ஸ்டாம்பு'கள் போன்றவை என்றும், நிர்வாகத்திலிருப்போர் சொல்வதை அப்படியே சட்டசபை உறுப்பினர்கள் ஒப்புக்கொள்கிறார்கள் என்றும் கூறவேண்டியிருக்கிறது" என்றும் அவர் கூறினார்.

தொடர்ந்து அவர் பேசுகையில் இந்தியாவில் மேல்சபைகள் தேவையில்லை என்று கூறினார்.

அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளில், ஒரு குறிப்பிட்ட வகுப்பினருக்கு பிரதிநிதித்துவம் அளிக்கவே மேல் சபைகள் இருக்கின்றனவென்றும், இந்தியாவில் இதுபோன்ற வகுப்புகள் ஏதும் கிடையாது என்றும் அவர் எடுத்துக் காட்டினார்.

"இந்தியாவில் அரசியல் கட்சிகள் இரு சபைகளுக்கும் உறுப்பினர்களை நியமிக்கின்றன; எனவே தனி வகுப்பு பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டிய அவசியம் கிடையாது," என்றும் அவர் கூறினார்.

இந்து மத அற்புதங்களைத் தோற்கடிக்கும் பெரும் அற்புதம்!

இந்து மத வெறியர் சாட்டர்ஜிக்கு அர்ப்பணம்

திருச்சூரிலிருந்து 20-மைல் தூரத்திலுள்ள சல்லிச்சேரி என்னும் கிராமத்தில் 70-வயதுடைய பெண் ஒருவர் இறந்துபோன நிகழ்ச்சியில் அதிசயம் ஒன்று நடைபெற்றதாகச் சொல்லப்படுகிறது.

இப் பெண்ணின் பெயர் இத்தினம் என்றும், இவர் ஜாக்கோபைட் சிரியன் கிறிஸ்துவ வகுப்பைச் சேர்ந்தவர் என்றும் கூறப்படுகிறது.

இறந்துபோன அவரது உடலைக் குளிப்பாட்டுகையில், அவரது மார்பிலும், உள்ளங்கைகள், உள்ளங்கால் ஆகிய இடங்களிலும் சிவப்பு நிறத்தில் சிலுவையின் உருவம் காணப்பட்டதாம். இப்பெண்மணி, தலைச்சேரியில் நீண்ட காலமாக மதச் சேவையில் ஈடுபட்டிருந்தாராம்.

உடலில் சிலுவையின் உருவம் காணப்பட்ட செய்தி பரவியதும், பக்கத்து கிராமத்திலிருந்து ஏராளமான மக்கள் வந்து இறந்தவரின் உடலைப் பார்த்தார்களாம்.

அவரது உடலை, பொதுமக்கள் பார்ப்பதற்காக அங்குள்ள கிறிஸ்துவக் கோயிலில் வைத்திருந்தார்களாம்.

வீட்டிலிருந்து அந்த உடல் கோயிலுக்கு இறுதிச் சடங்கு ஆராதனைகளுக்காக எடுத்துச் செல்லப்பட்டபோது, உடலில் காணப்பட்ட சிலுவையின் அடையாளங்கள் 'பளிச்' சென்று அதிகத் தெளிவாக மின்னினவாம்.

அப்பெண்மணி இறந்து 60 மணி நேரம் சென்றும், அவரது உடல் கெட்டுப் போகாமல் இருந்தது என்று சொல்லப்படுகிறது.

திராவிட நாட்டவரை மயக்க!

அனந்தசயனத்தின் மாரீசத்தனம்!

ஆமதாபாத், ஜன. 9—

மக்கள் சபையின் உதவித் தலைவர் அனந்தசயனம் பேசுகையில், "ஆண்டில் ஒரு தடவை மக்கள் சபையின் கூட்டத்தை சென்னை அல்லது ஐதராபாத் போன்ற நகரில் நடத்தலாம்," என்று யோசனை கூறினார்

"இதன்மூலம் மத்திய சர்க்கார் என்ன செய்கிறது என்பதை அறிந்துகொள்ள மக்களுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கும்," என்றும் அவர் கூறினார்.

ஆமதாபாத் 'வாங்கி' நிலையத்தில், "மக்கள் சபையில் ஒரு நாள்" என்ற தலைப்பில் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

திருத்தணி முருகனாலும் காப்பாற்ற முடியவில்லை

சென்னை, ஜன. 9—

திருத்தணி நோக்கிச் சென்ற 'திருப்புகழ் பஜனை ஸ்பெஷல்' வண்டியில் திருத்தணி முருகனைச் சேவிக்க சென்னை திருவல்லிக்கேணியைச் சேர்ந்த கிருஷ்ணசாமி அய்யர் என்பவர் டிக்கட் இல்லாமல் 'புட்போர்டில்' பிரயாணம் செய்தாராம். ஆனால், வண்டியில் அதிகமான நெருக்கடி இருந்த காரணத்தால், ஆவடி ரயில் நிலையத்தில் அவர் வண்டியிலிருந்து கீழே விழுந்துவிட்டார். காயமுற்ற அவர், சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார்.

சிகிச்சை முடிவுற்றதும் அவர் மீது, வண்டியில் டிக்கட் இல்லாமல் பிரயாணம் செய்தமைக்காக வழக்குத் தொடரப்பட்டது. சென்டிரல் ரயில் நிலைய மாஜிஸ்திரேட், கிருஷ்ணசாமி அய்யருக்கு மூன்று ரூபாய் அபராதமும், கட்டத் தவறினால் ஒரு வார வெறுங்காவல் தண்டனையும் விதித்தாராம். அபராதப் பணம் கட்ட இயலாது போகவே கிருஷ்ணசாமி அய்யர் ஒரு வாரம் சிறைக்கு அனுப்பப்பட்டார் என்று தெரிகிறது.

நம் நாடு

தி.மு.க.தினஇதழ் ஆசிரியர்..அண்ணாதுரை

சென்னை 10—1—1955 திங்கள்

யார் பொறுப்பாளிகள்?

தங்களுடைய தினசரி வாழ்க்கையைப் பாதிக்கும் விவகாரங்களை சட்ட வரம்பிற்குட்பட்டு பரிகாரம் தேடிக் கொள்ள முடியாத நிலையில், சட்டத்தை மீறி கிளர்ச்சி செய்யும் உணர்வை பொதுமக்களில் பெரும்பான்மையினர் பெற்று விடுகின்றனர். அதற்கு மேலும் பலரின் ஆதரவும், தினம் தினம் பெருகி வருவதும் இயற்கையே யாகும். அரசாங்கத்தின் செயலேயும், கிளர்ச்சியை ஒடுக்க அரசாங்கச் சார்பில் மேற்கொள்ளப்பட்ட அடக்குமுறை வெறியையும் துவக்கத்தில் வெளிப்படையாக ஆதரித்துவந்தவர்கள், கிளர்ச்சி வலுக்க வலுக்க தங்கள் ஆதரவை மெள்ள மெள்ளக் குறைத்துக்கொண்டும் வந்துவிடுகின்றனர். எஞ்சிய அரசாங்க ஆதரவாளர்களும்கூட, தங்கள் ஆதரவை வெளிப்படையாகக் காட்டிக்கொள்ளவும் அஞ்சுகின்றனர்.

அரசாங்கத்தின் தவறிய போக்கினுல் பொது மக்களிடம் ஏற்படுகிற அதிருப்தியை, அதிகாரத்திலிருக்கும் அரசியல் கட்சிக்கு எதிராக உள்ள மற்ற அரசியல் கட்சிகள் தங்களுக்குச் சாதகமாக ஆக்கிக் கொள்ள முன்வருவது, எதிர்பார்க்கக் கூடிய இயற்கையே யாகும். இதில் தவருென்றும் இல்லை. இது நியாய விரோதமான செயலும் ஆகாது. கட்சி ஆட்சி அமைப்பின் அடிப்படையுமாகும் இது.

தனது குறிப்பிட்ட ஒரு செயலில் பொது மக்கள் அதிருப்தி கொள்வதாக தான் கருதுமானல், போலிப் பெருமையைப் பெரிதாகக்கொள்ளாமல், அதிருப்திக்குக் காரணமாக இருந்த தனது தவருன செயலை உடனடியாக வாபஸ் பெற ஒரு அரசாங்கம் தன்னிச்சையாக முன்வர வேண்டும். அதை விடுத்து, தன் தவறை மாற்றிக்கொள்ள மறுப்பதுடன், எதிர்க்கும் பொதுமக்களை ஏச முற்படுவதும், அடக்குமுறையை விசத் துவிவதும், அவ்வரசாங்கத்தின் ஆணவத்தை மதிப்பிட உதவுமேயல்லாது, அதன் விவேகத்தை அளந்திட அது ஒருக்காலும் உதவாது.

ஒரு அரசாங்கத்தை எதிர்த்து, பொதுமக்கள் சார்பில் துவங்கப்படும் நேரடி நடவடிக்கைகள் அனைத்தும், குறிப்பிட்ட ஒரு அரசாங்கத்தால் அறிந்தோ, அறியாமலோ சிருஷ்டித்துக் கொள்ளப்பட்ட இடுக்கண்களேயாகும். பொது மக்களிடமிருந்து ஒரு அரசாங்கத்திற்குக் கிடைக்கும் அன்பு வழி இயங்கும் அறவழி பலத்தைவிட, இராணுவமும், சட்டமும் அளிக்கும் ஆதரவு பலம் வன்மையானது என அரசாங்கத்தை இயக்கும் கட்சியினர் தீர்மானித்துக் கொள்வதினுலேயே, குறிப்பிட்ட ஒரு அரசாங்கத்திற்கு எதிராகக் கிளர்ச்சிகள் ஏற்படுவதும், அதனுல் ஒரு அரசாங்கம் நிலைகுலைவதும் நடைபெறுகின்றன. இதன் விளைவாகபொதுமக்களிடம்உருவாகும் எண்ணம், குறிப்பிட்ட ஒரு விஷயத்திற்காகச் செய்யப்பட்ட கிளர்ச்சியில் பெற்ற வெற்றியளவோடு கட்டுப்பட்டு விடுவதில்லை — மறந்துவிடுவதும் கிடையாது. எதிர்க் கிளர்ச்சியும், அதன் வெற்றியும், அரசாங்க வீட்சியும், குறிப்பிட்ட ஒரு உணர்வை, பொதமக்களுடைய உள்ளத்தில் உருவாக்கிவிடுகிறது. அந்த எண்ணம் உடனடியாகத் தேய்ந்து விடுவதில்லை. அதற்கு மாருக மேலும் மேலும் தீவிரமாக வளர்ந்தோங்கி வருகிறது. இவ்வுணர்வில் குறிப்பிடத்தகுந்த நன்மையும் உண்டு; அதே அளவில் அஞ்சத் தகுந்த அபாயமும் உண்டு. கூர் ஏறிய இருமுனைக் கத்தி போன்றது இவ்வுணர்வு.

இவ்வுணர்வை நம்மவரிடம் விதைத்தவர்கள் காங்கிரஸ் கட்சியினரேயாவர். இவ்வுண்மையை காங்கிரஸ் கட்சியினரும் ஒப்பித்தான் ஆக வேண்டும்; அவர்களோ ஒப்ப மறுப்பர். அதனுல் உண்மை மறைந்து விடுவதில்லை.

ஏகாதிபத்திய ஆட்சியில்,காங்கிரஸ் கட்சித் தலைவர்கள், தாங்கள் கொண்டிருந்த மனப்பண்பு ஏகாதிபத்தியம் அகன்ற பிறகும், ஆட்சிபீடத்தில் அமர்ந்த பின்னரும், கணிசமான தலைகீழ் மாற்றம் பெற்றுவிட்டது.

வெள்ளை அதிகார வர்க்கத்தினரைப் போன்றே அதிகாரம் பெற்றுள்ள காங்கிரஸ் தலைவர்களும், அதிகார மனப்பண்பு பெற்றுவிட்டனர். சேவா உள்ளம் இருளடைந்து போய், அது இருந்த இடத்தில் அதிகார முனைப்பு குடியேறிக் கிடக்கிறது. எனவே அதிகார இறுமாப்பினுல் பொதுமக்களை அலட்சியப்படுத்திவந்த ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராகக் காங்கிரஸ் தலைவர்கள் எடுத்துக் கொண்ட அதே நடவடிக்கைகளை, அதே ஆங்கிலேயர் போக்கில் துரைத்தனம் செய்து வரும் காங்கிரஸ் தலைவர்களுக்கு எதிராக, பொதுமக்கள் சார்பில் மற்றக் கட்சியினரும் மேற்கொள்ளுகின்றனர். இப்போக்கில் மறைந்து கிடக்கும் உண்மையை ஆராய்ந்தறிய காங்கிரஸ் தலைவர்கள் மறுக்கின்றனர். சிலர் அறிந்தாலும், அதிகார ஆசையின் காரணமாக அதை வெளிப்படையாக ஒப்புக்கொள்ள மறுக்கின்றனர். சிலர் வெளிப்படையாகக் கூறினுலும், அப்போக்கிலிருந்து தங்களைத் திருத்திக் கொள்ளவேண்டுமே எனக் கருதாமல், அதிகாரத்தில் ஒட்டிக் கொண்டிருந்தாலே போதுமானது எனச் சிலர் இருந்து வருகின்றனர்.

காங்கிரஸ் ஆட்சிக்கு எதிராக நடைபெறும் நேரடி கிளர்ச்சிகளுக்குக் காங்கிரஸ்தான் பொறுப்பேற்க வேண்டியதாகும் என்ற உண்மையை, மைசூர் முதலமைச்சர் அனுமந்தையா அவர்கள், விளக்கிக் கூறியுள்ளார்.

"அரசாங்கத்தைப் பாராட்டி ஒரு நல்ல வார்த்தை கூறுவதற்காக, இக்காலத்தில் ஒருவருக்குப் பெருந்துணிவு வேண்டும். அவ்வாறு பாராட்டுவது அரசாங்கத்திற்கு இச்சகம் பேசுவதாகக் கருதப்படுகிறது. அரசாங்கத்தை இழித்துரைப்பது வீரமெனக் கொள்ளப்படுகிறது. இக்கேவல நிலைக்கு, காங்கிரஸ் கட்சியும், காங்கிரசிலிருக்கின்ற நாங்களும்தான் பழிக்கப்பட வேண்டியவர்களாவோம். கடந்த ஐம்பது ஆண்டுகளாக சட்டப்படி அமைந்த அதிகாரத்தை உதறித்தள்ளி வந்தோம்; அதன் விளைவு இப்பொழுதும் இருந்து வருகிறது; அதற்கு நாங்கள் இப்பொழுது இலக்காகிக் கிடக்கிறோம்."

காங்கிரஸ் கட்சித் தலைவர்கள், தங்களுடைய முன்னுள் நடத்தையின் காரணமாக ஒரு புதிய விளைவை மக்களிடை உலாவ விட்டு விட்டார்கள். அது மறைந்தொழியும் வகையில் காங்கிரஸ் தலைவர்களின் பணி இருக்கவில்லை. அதற்கு மாருக, அதை மேலும் வன்மையுறச் செய்வதாகவும், விரிவடையச் செய்வதாகவுமே காங்கிரஸ் தலைவர்களின் நடத்தை இருந்து வருகிறது. அதை மாற்றியமைக்கக் காங்கிரஸ் தலைவர்களால் ஒருக்காலும் முடியப்போவது கிடையாது.

துப்பாக்கிப் பிரயோக விசாரணை

தனி நீதிக் குழு விடம் ஒப்படைக்கப்பட வேண்டும்

ஆவடி காங்கிரசுக்குத் தீர்மானம் வருகிறது

ஒவ்வொரு மாநிலத்திலும், நிரந்தரமாக நீதிக் குழு ஒன்று நியமிக்கப்படவேண்டும் என்றும், அந்த மாநிலத்தில் நடைபெறும் போலீசார் துப்பாக்கிப் பிரயோகங்கள் பற்றிய விசாரணை செய்யும் பொறுப்பை அக்குழுவிடம் மட்டுமே ஒப்படைக்க வேண்டும் என்றும் தீர்மானம் ஒன்று ஆவடியில் நடைபெறும் காங்கிரஸ் மாநாட்டிற்கு அனுப்பப்பட்டிருக்கிறதாம். (இதன் சுருக்கம் ஏற்கனவே வெளிவந்துள்ளது.)

ஆமதாபாத் நகர காங்கிரசின் தலைவரும், அகில இந்திய காங்கிரஸ் குழுவின் உறுப்பினருமான திரிகம் பட்டேல் என்பவர் இந்த அதிகாரப் பற்றற்ற தீர்மானத்தை கொண்டு வருகிறுர் என்று தெரிகிறது.

அகில இந்தியக் காங்கிரஸ் குழுவினர் தனிக்குழு ஒன்றை நியமித்து, எச்சமயங்களில் துப்பாக்கிப் பிரயோகம் செய்யலாம் என்பதை வரையறுக்குமாறு தீர்மானம் கோருகிறது.

எச்சமயத்திலும்,போலீசார் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு இலாகா விசாரணை கூடாது என்றும், துப்பாக்கிப்பிரயோகம், மக்களைக் கொல்வது, தடிப்புக் காவல், கொடுமைச் சிறை முகாம்கள், இவை எல்லாம் சர்வாதிகார ஆட்சியின் சின்னங்கள் என்றும், ஜனநாயக நாட்டில் இதுபோன்ற நிகழ்ச்சிகளை எளிதில் நடைபெற விடக்கூடாது என்றும் அத்தீர்மானம் கூறுகிறது.

இதற்காக அமைக்கப்படும் தனி நீதிபதி குழுவில் உயர்நீதி மன்ற நீதிபதிகள், அல்லது மாவட்ட நீதிபதிகள் மூவர் இருக்கவேண்டுமென்றும், இந்தக் குழு எப்போதும் நிரந்தரமானதாக இருக்க வேண்டும் என்றும் தீர்மானம் கூறுகிறது.

வீதியில் அலையும் அனுதைச் சிறுவர்கள்

நல்ல குடிமக்களாக மாற்றப்படுவர்

புது டில்லியில் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது

வேலையேதுமின்றி வீதிகளில் அனுதைகளாகச் சுற்றித்திரியும் சிறுவர்கள் நாட்டின் நல்ல குடிமக்களாக மாற்றப்படாவிட்டால் அவர்கள் குற்றவாளிகளாக மாறி சமுதாயத்திற்குத் தீங்கிழைக்கும் நிலைமை ஏற்படுகிறது.

புதுடில்லியில் சுற்றித் திரியும் இதுபோன்ற சிறுவர்களின் வாழ்வை வளமாக்கும் திட்டமொன்று அமுல் நடத்தப்படுகிறது.

அனுதைகளாகவும், வேலையின்றியும் வீணே சுற்றிக் கொண்டிருக்கும் இளம் வயதுடைய சிறுவர்கள் 75 பேர் இப்போது பல விதமான தொழில்களில் பயிற்றுவிக்கப்படுகிருர்கள்.

இத்திட்டத்தை ஒன்பது பேர் கொண்ட குழு ஒன்று ஆரம்பித்திருக்கிறது. இக்குழுவின் தலைவர் திருமதி இந்திரா காந்தியாவார். தோழியர் மிருதுளா சாராபாய், தோழர் கே. ஜி. சயிதீன் போன்றோர் இக்குழுவில் உறுப்பினர்களாக இருக்கின்றனர்.

இச்சிறுவர்கள் இப்போது காளுட் அரண்மனையைச் சேர்ந்த கிடங்கு ஒன்றில் வாழ்கிருர்கள்.

இவர்களுக்கு இலவசமாக உணவு, உடை அளிக்கப்படுகிறது.

துணி நெய்வது, தச்சு வேலை, பூக்கள் தைப்பது, தோட்ட வேலை போன்ற சிறு தொழில்கள் அவர்களுக்கு கற்றுத் தரப்படுகின்றன.

இவர்களில் சிலர் டெக்னீஷியன்களாகப் பயிற்சியளிக்கப்படுவர் என்றும் கூறப்படுகிறது.

நல்ல குடிமக்களாக வாழ்வது எப்படி என்று இவர்களுக்குப் பாடமும் சொல்லித் தரப்படுகிறதாம்.

இத்திட்டம் வெற்றி பெற்ருல், புதுடில்லியில் மேலும் பலரை நல்வழிப்படுத்தவும், குற்றங்களைக் குறைக்கவும் கூடுமாம்.

கட்டுக் கடங்காது, அதிக தொல்லை விளைவிக்கும் இந்த அனுதைச் சிறுவர்களினுல் நகரில் ஏற்படும் தொல்லைகள் தீர்ந்துவிடுமென நம்பப்படுகிறது.

இத்திட்டத்திற்கு இந்தியப் பிரதம மந்திரி பண்டித நேரு, ரூ. 10,000 அளித்திருக்கிருர். இந்திய சர்க்கார் கல்வி இலாகா, ரூ. 24,000 மானியம் தருவதாக ஒப்புக்கொண்டிருக்கிறதாம்.

டில்லி மாநில முதல் அமைச்சர் இத்திட்டத்திற்கு ஆதரவு தர முனைந்திருக்கிருர். டில்லி மாநிலமும், டில்லி நகர சபையும் இத்திட்டத்திற்கு மானியம் அளிக்கும் என்று தெரிகிறது.

இன வேற்றுமையினுல் ஏற்படும் இன்னல்கள்

கல்வி வசதியளிப்பதிலும் பிற்போக்கு மனப்பான்மை

எல்லா இன மக்களுக்கும் சமத்துவம் வழங்குமாறு டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி வேண்டுகோள்

"இனம், நிறம், ஆண்—பெண், மொழி, மதம், அரசியல் இவை போன்ற காரணங்களுக்காகவும், மற்றும் இதர கருத்துக்களுக்காகவும், யாருக்கும் கல்வி வசதியளிப்பதில் வித்தியாசமோ, தடையோ காட்டப்படக் கூடாது; இம்மாதிரி வேற்றுமைகள் காட்டப்படுவதை எதிர்க்க எல்லா நாட்டு சர்க்கார்களும் முன்வர வேண்டும்,"

என்று, இந்திய சர்க்கார் மக்கள் சபை உறுப்பினரான டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி அவர்கள், நியூயார்க்கில் நடைபெற்ற சிறுபான்மையோர் பாதுகாப்பு, இன வேற்றுமைத் தடுப்பு துணைக் குழுக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிருர்.

லெபனுன் பிரதிநிதியான சார்ல்ஸ் அமான் என்பவர், கல்வித் துறையில் இனவேற்றுமை குறித்துப் பூர்வாங்கமான அறிக்கையொன்றை சமர்ப்பித்திருந்தார்.

இந்த அறிக்கை பற்றி ஐ நா. தலைமைக் காரியாலயத்தில் மேற்குறிப்பிட்ட துணைக் குழு விவாதிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் மேலும் கூறியதாவது:—

"இன வேற்றுமைகளை இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவற்றுள், சர்க்காரால் ஆரம்பிக்கப்படுகின்ற இன வேற்றுமைச் செயல்கள் ஒன்ருகும். மற்ருென்று, சமூகத்தின் நிலை காரணமாகவோ, அன்றி, சரித்திரத்தினுல் ஏற்பட்டுள்ள நிலை காரணமாகவோ ஏற்படுகின்ற இன வேற்றுமைச் செயல்கள் ஆகும். ஆனுல், முதலில் கூறப்பட்ட இன வேற்றுமைக் கொடுமைகளைக் காட்டிலும் இரண்டாவதுள்ள செயல்களை அவ்வளவு கொடுமை வாய்ந்ததாகக் கொள்ள முடியாது."

மேலும் அவர் கூறினுர்:—

"சில நாடுகளில் கல்வி வசதி குறைவாகக் காணப்படுவதற்கு அந்நாட்டின் பொருளாதார நிலையே காரணமாக இருக்கலாம். ஒரு நாட்டிலுள்ள எல்லாக் குழந்தைகளுமே கல்வி வசதி பெறவில்லை என்பது, ஒருவகையான வேற்றுமை மனப்பான்மைக்கு இடந்தருகிறது. ஒவ்வொரு இனத்துக்கென தனித்தனி பள்ளிகள் இருத்தல் கூடாது. எல்லா இன மக்களும் ஒன்ருகக் கலந்து பள்ளிகளில் படிக்க வேண்டும்.

"எல்லா வகையான வேற்றுமைச் செயல்களையும் ஒரு தனி விசேட பிரதிநிதி ஆராய்வதென்ருல் பல ஆண்டுகாலம் பிடிக்கும். எனவே சர்க்கார் பின்பற்றி வருகின்ற வேற்றுமைச் செயல்களை மட்டும் பரிசீலனை செய்தால் மட்டுமே போதுமானதாகும்."

இவ்வாறு கூறிவிட்டு, அவர், "தென்னுப்பிரிக்க சர்க்கார், ஆப்பிரிக்கர்களின் கல்வி வசதிக்காக ஒதுக்குகின்ற தொகை மிக மிகக் குறைவானதாகும்," என்று குறிப்பிட்டிருக்கிருர்.

உங்கள் குறிப்புக்கு!

கி. பி. 1024-ம் ஆண்டில் கஜினி முகம்மது சௌராஷ்டிரத்துக்குள் நுழைந்து, சோமநாதர் ஆலயத்தை அழித்தான். இந்த ஆலயத்தில், மாலை வேளையிலே 300 நாட்டியப் பெண்கள் ஆரத்தி எடுத்து நாட்டியமாடுவது வழக்கமாம்!

இந்த ஆலயத்திலிருந்த 56 தூண்களில் ரத்தினங்கள் பதிக்கப்பட்டிருந்தனவாம்!

ஆலய மணியை அடிப்பதற்காக உபயோகப்படுத்தப்பட்ட பொற் சங்கிலியின் எடை 200 மணங்கு இருந்ததாம்!

இந்திய 'காஸ்மிக்' ஒளி ஆராய்ச்சிக்கூடம்

நீலகிரியில் அமைக்கப்படுகிறது

உதகமண்டலம், ஜன. 7—

இந்திய அணுசக்திக் குழுவினரின் திட்டப்படி இந்தியாவில் அமைக்கப்பட இருக்கும் 'காஸ்மிக் ஒளி' ஆராய்ச்சிக்கூடம் நீலகிரியில் அமைக்கப்படும் என்று தெரிகிறது.

ஆறு மாதங்களுக்கு முன்னர் இந்த ஆராய்ச்சிக்கூடம் ஆரம்பிக்க நீலகிரியில் போதிய வசதிகள் இருக்கின்றனவா என்பதை ஆராய இந்திய அணுசக்தி குழுவின் உறுப்பினரான டாக்டர் எச். சி. பாபா நீலகிரிக்கு வந்திருந்தார்.

'காஸ்மிக் ஒளி' ஆராய்ச்சிக்கூட அமைப்பிற்கான ஆரம்ப வேலைகள் துவக்கப்பட்டுவிட்டனவாம். இந்த வேலைகள் டாடா ஆராய்ச்சிக்கூடத்தினைச் சேர்ந்த டாக்டர் ஏ. பி. சாகீர் என்பவரின் மேற்பார்வையில் நடந்து வருகின்றன. சென்னை கவர்னரின் அனுமதியுடன் நீலகிரியில் உள்ள சர்க்கார் மாளிகையில் தற்காலிக ஆராய்ச்சிக்கூடம் ஒன்றும், அமைக்கப்படுகிறதாம்.

இந்திய சர்க்கார் இதற்காகும் எல்லாச் செலவுகளையும் ஏற்றுக்கொள்கிறது.

மாரிசன் திருமணம்

கணவனுக்குக் கீழ்ப்படிய மனைவி மறுப்பு

பிரிட்டனில் தொழிற் கட்சித் தலைவர்களில் முக்கியமானவரான ஹெர்பர்ட் மாரிசன் தனது 67-வது வயதில் மீண்டும் திருமணம் செய்துகொண்டார்.

ரோச்டேல் நகர வியாபாரிகளில் ஒருவரான திருமதி எடித் மெடோ கிராப்ட் என்பவரை மாரிசன் திருமணம் செய்துகொண்டார். இப்பெண்மணிக்கு 47 வயதாகிறதாம்.

திருமண நிகழ்ச்சி 25 நிமிடங்களில் நடைபெற்றதாம். ஆனால் கணவனுக்குப் பணிந்து நடக்க திருமதி மாரிசன் மறுத்துவிட்டாராம்.

திருமண வாக்குறுதியில், மணமக்கள் இருவரும், 'அன்பு, மதிப்பு, கீழ்ப்படிதல்' என்று வாக்குறுதி எடுத்துக்கொள்ளும்போது, 'கீழ்ப்படிவது' என்ற சொல் மட்டும் வாக்குறுதியிலிருந்து நீக்கப்பட்டுவிட்டதாம்.

திருமணத்தை ஒட்டி ஏராளமான மின்சார விளக்குகள் போடப்பட்டிருந்ததாம்; ஆனால், 'பியூஸ்' ஏற்பட்டதால், விளக்குகள் அணைந்து போயிற்றாம்.

"உங்கள் கஷ்டமெல்லாம் குறையுமாக" என்று பிரிட்டனின் கன்சர்வேடிவ் கட்சி, ஹெர்பர்ட் மாரிசனுக்கு வாழ்த்து அனுப்பியிருக்கிறதாம்.

ஆதரிக்கிறார் — ஆனால் அச்சமுறுகிறார்!

ஆசிய—ஆப்பிரிக்க மாநாட்டில் ஜப்பான் பங்கெடுத்துக் கொள்ள வேண்டுமென்றே தான் விரும்புவதாக ஜப்பான் வெளிநாட்டிலாகா அமைச்சர் கூறினார்.

"ஆனால் அமெரிக்கா இந்த மாநாட்டின் மீது காட்டும் வெறுப்பைப் பார்க்கும்போது மாநாட்டில் கலந்து கொள்ளுவதற்கு முன்பாக அமெரிக்காவுடன் கலந்து பேசவேண்டும்" என்று அவர் மேலும் கூறினார்.

ஜப்பானின் வெளிநாட்டுக் கொள்கை அமெரிக்காவின் ஆதிக்கத்தில் இருக்கிறது.

பாகிஸ்தானில் அணுசக்திக் கழகம்

ஐ. நா. - வின் ஆக்க வேலைகளுக்கான அணு சக்தித் திட்டப்படி, பாகிஸ்தானில் ஒரு 'அணு சக்திக் கழகத்'தை நிறுவ பாகிஸ்தான் சர்க்கார் முடிவு செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.

கழகச் செய்திகள்

பாப்பம்பட்டியில் தி. மு. க. பொதுக் கூட்டம்

25—12—54 மாலை 7 மணியளவில், தோழர் ஜி. எஸ். பதி தலைமையில் நடைபெற்ற கழகப் பொதுக் கூட்டமொன்றில், தோழர் க. அன்பழகன் அவர்கள் தி. மு. கழகத்தின் குறிக்கோளை விளக்கிப் பேசினார்.

* * *

பெயர் சூட்டல்

அன்றைய பொதுக் கூட்டத்தில், தோழர் பி. எஸ். வி. காதர் அவர்களது புதல்வனுக்குத் தோழர் அன்பழகன் அவர்கள் 'கமால் பாட்சா' என்று பெயர் சூட்டினார். இதன் நினைவாக 'நம்நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை அளிக்கப்பட்டது—வரப்பெற்றோம் —நன்றி—பொறுப்பாளர்.

சென்னை 50-வது வட்ட தி. மு. கழகம்

26—12—54 பகல் 12 மணியளவில், தோழர் திருநாதன் தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழு உறுப்பினர் கூட்டத்தில், பொதுச் செயலாளர் அண்ணாதுரை மைத்துனர் அரங்கநாதன், தோழர் கே. ஆர். இராமசாமி தாயார் ஆகியோர் இயற்கையெய்தியமைக்கு அனுதாபம் தெரிவித்துக் கொண்ட பின்னர், கழக வரவு—செலவு கணக்குகள் சரிபார்க்கப்பட்டதுடன், திராவிடர் திருநாளைச் சிறப்புறக் கொண்டாடுவதெனவும், சென்னை மாவட்டக் கழகம் கொண்டாடவிருக்கும் பொங்கல் விழாவின்போது நாடகம் ஒன்று நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

சென்னை 44-வது வட்ட தி. மு. கழகம்

1—1—55 இரவு 10 மணியளவில் நடைபெற்ற கழகச் செயற்குழு உறுப்பினர் கூட்டத்தில், பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்களின் மைத்துனர் அரங்கநாதன் இயற்கையெய்தியமைக்கு அனுதாபம் தெரிவித்துக் கொண்டபின்னர், சென்னை சர்க்காரின் புதிய நாடகத் தடைச் சட்டத்தைக் கண்டித்தும், அவ்வட்டத்தைச் சேர்ந்த அரங்கநாதபுரம் தெருவில் விளக்குகள் அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளுமாறு அத்தொகுதி நகர சபை உறுப்பினரைக் கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஆத்தூர் —முல்லைவாடி தி. மு. கழகம்

1—1—55 மாலை 5 மணிக்கு கழக இல்லத்தில் செயற் குழுக் கூட்டம் தோழர் அருணை. சா. காந்திநாதன் தலைமையில் நடைபெற்றது. பிப்ரவரி முதல் வாரத்தில் ஓர் பொதுக் கூட்டம் நடத்துவதெனவும், சென்னை அரசியலாரின் புதிய நாடகத் தடைச் சட்டத்தைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

குமாரபாளையம் தி. மு. க.

1—1—55 மாலை ஆர். நடராசன் தலைமையில் நடைபெற்ற கழகப் பொதுக் கூட்டத்தில் தோழர் எம். எஸ். இராமசாமி சொற்பொழிவாற்றியதும், சென்னை சர்க்காரின் புதிய நாடகத் தடைச் சட்டத்தைக் கண்டித்தும், தமிழர்களை அவமானப்படுத்தும் முறையில் நடைபெறும் நாடகங்களைத் தடைசெய்யக் கேட்டுக்கொண்டும், அவ்வூரில் ஒரு பொது மேடையொன்றைக் கட்டித் தருமாறு பஞ்சாயத்துக் குழுவினரைக் கோரியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சென்னை 42-வது வட்ட தி. மு. க. (கிளை)

2—1—55 காலை, மேற்படி கிளையின் புதிய அலுவலகத்தை, '4. நமசிவாய முதலித் தெரு, திருவல்லிக்கேணி' என்ற முகவரியில் குராசவேலு தலைமையில், தோழர் ஜி. பெருமாள் திறந்துவைத்தார். தோழர் நீல.-நாராயணன் எல்லோரையும் வரவேற்று, கிளையின் சார்பில், மும்முனைப் போராட்டத்தில் சிறை சென்ற தோழர்களுக்கு மலர்மாலை அணிவித்தார். பின்னர், தோழர் பூ. அரங்கசாமி கழகக் கொடியேற்ற, தோழர் இளம்பரிதி அண்ணா படிப்பகத்தைத் திறந்து வைத்தார்.

சேதுக்குவாய்த்தான் தி. மு. கழகம்

2—1—55ல் தோழர் பொ. ம. சவரிமுத்து தலைமையில் நடைபெற்ற கழக நிர்வாக உறுப்பினர் கூட்டத்தில் துணைச் செயலாளரை நீக்கிவிட்டு அவருக்குப் பதில் தோழர் ஏ. சவரிமுத்து தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் சென்னை சர்க்காரின் புதிய நாடகத் தடைச் சட்டத்தைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஆறுமுகனேரி தி. மு. க. (நெல்லை மாவட்டம்)

2—1—55ல், காந்தி மைதானத்தில் (சந்தை) நடைபெற்ற கழகப் பொதுக் கூட்டத்தில், தூத்துக்குடி தோழர் அப்பாசாமி 'தந்திரமா—மந்திரமா' என்பதை பல அதிசய வேலைகள் செய்து எல்லாம் தந்திரமே என்பதை நிரூபித்துக் காட்டினார். பின்னர், தோழர் எஸ். நடராசன் அவர்கள் தி. மு. கழகம் இதுகாறும் செய்துவந்துள்ள பொதுப்பணிகள் குறித்தும், மதவாதிகளின் கேள்விகளுக்கு விளக்கமான பதில்கள் தந்தும் நீண்டதோர் சொற்பொழிவாற்றினார்.

மாயூரம் நகர தி. மு. கழகம்

2—1—55 மாலையில், தோழர் என். கிட்டப்பா தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில், 5—12—54ல் நடைபெற்ற பொதுக் கூட்ட வரவு—செலவு சரிபார்த்து ஒப்புக்கொள்ளப்பட்டதுடன், 16—1—55ல் பொங்கல் விழா நடத்துவதெனவும், கைத்தறி வாரத்தையொட்டி துண்டு விளம்பரங்கள் மூலம் பொது மக்களை கைத்தறித் துணிகளையே வாங்குமாறு கோருவதெனவும், சென்னை சர்க்கார் கொண்டுவந்துள்ள கடைச்சிப்பந்திகள் சட்டத் திருத்தத்தைக் கைவிடக் கோரியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கமுதி தி. மு. கழகம்

2—1—55 காலை 10 மணிக்கு, கழகக் காரியாலயத்தில் தோழர் இ. எல். எம். சௌந்திரபாண்டியன் தலைமையில் நடைபெற்ற கழக உறுப்பினர் கூட்டத்தில், இவ்வாண்டிற்கான கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: கே. எஸ். காமாட்சி; துணைச்செயலாளர்: வா. பெரியசாமி; பொருளாளர்: எஸ். கலைச்செல்வன்; மாவட்டப் பிரதிநிதி: இ. எல். எம். சௌந்திரபாண்டியன்; செயற்குழு உறுப்பினர்கள்: நரசிங்கம், மா. மூக்கையா, ப. சொக்கன், எஸ். முனியாண்டி, இரா. இளையோன், வீராச்சாமி, எஸ். முத்துரத்தினம், எஸ். அழகர்சாமி.

பின்னர், சென்னை சர்க்காரின் புதிய நாடகத் தடைச் சட்டத்தைக் கண்டித்தும் பொங்கல் விழாவை சிறப்பாகக் கொண்டாடுவதெனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

முறப்பநாடு தி. மு. கழகம்

2—1—55 மாலை 6 மணிக்கு, தோழர் மு. பாண்டியன் தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில், தோழர்கள் சி. அரியமுத்து, லெ. புதியமுத்து ஆகியோர் பேசிய பின், சென்னை சர்க்காரின் புதிய நாடகத் தடைச் சட்டத்தைக் கண்டித்தும், முறப்பநாடு வட்டாரத்திற்கு ஒரு பஞ்சாயத்துக் குழுவை ஏற்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கோரியும், சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை நிறுவ மத்திய சர்க்காரை வற்புறுத்துமாறு சென்னை சர்க்காரைக் கேட்டுக் கொண்டும், சேலத்தில் அத்தொழிற்சாலை நிறுவுவதைக் கிண்டல் மொழிந்த அமைச்சர் கிருஷ்ணமாச்சாரியாரின் போக்கைக் கண்டித்தும்தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சோபனபுரம் தி. மு. கழகம்

2—1—55ல், தோழர் எஸ். டி. சீனிவாசன் தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழு கூட்டத்தில், புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: எஸ். டி. சீனிவாசன்; துணைச் செயலாளர்: ந. அருணாசலம்; பொருளாளர்: ல. கோபாலகிருஷ்ணன்; மாவட்டப் பிரதிநிதி: எஸ். எம். பி. மணியன்; செயற்குழு உறுப்பினர்கள்: எஸ். டி. சீனிவாசன், ந. அருணாசலம், ல. கோபாலகிருஷ்ணன், எஸ். எம். பி. மணியன், மு. நல்லப்பன், சோ. அ. தணிகாசலம், மு. பெருமாள், சி. சபாபதி, டி. ஆறுமுகம், இலக்குமணன், அ. இராமசாமி.

கோகூர் (ஒக்கூர்) தி. மு. க.

3—1—55 மாலை 5 மணிக்கு, தோழர் கோ. இ. இராமதாசன் தலைமையில் நடைபெற்ற கழகக் கமிட்டிக் கூட்டத்தில் செயலாளர் தோழர் பொ. கோதண்டராமன் விலகிக் கொண்டதினால் புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர்: பொ. தட்சிணாமூர்த்தி; துணைச் செயலாளர்: இரா. தேவராசன்; பொருளாளர்: பெ. அமிர்தலிங்கம்; மாவட்டப் பிரதிநிதி: பி. என். செயராமன்; செயற்குழு உறுப்பினர்கள்: கோ. இராமதாசன், கோ. குருசாமி, சு. அண்ணாமலை, வி. ரெங்கசாமி, சு. செகநாதன், க. கந்தசாமி. பின்னர், சென்னை சர்க்காரின் புதிய நாடகத் தடைச் சட்டத்தைக் கண்டித்தும், திராவிடர் திருநாளைக் கொண்டாடுவதெனவும், பொதுச் செயலாளரின் வேண்டுகோள்படி கைத்தறித் துணி விற்பனை செய்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

குருவரெட்டியூர் தி. மு. க.

5—1—55ல் தோழர் கி. கு. ரா. குருசாமி தலைமையில் நடைபெற்ற கழக உறுப்பினர் கூட்டத்தில் கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—செயலாளர்: ஜி. எஸ். சின்னசாமி; துணைச் செயலாளர்: பி. நாராயணசாமி; பொருளாளர்: ஆர். நாராயணசாமி; மாவட்டப் பிரதிநிதி ஜி. எல். ராமநாதன்.

திருநெல்வேலி ஜில்லா ஆதி-திராவிட மகாஜன சங்கம்

மேற்படி சங்க பம்பாய் கிளையின் புத்தாண்டுத் தேர்தல் கூட்டம், 26—12—54 காலை 10 மணிக்கு, திரு. ஆம் கே சுப்பையா தலைமையில் நடைபெற்றபோது, நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— தலைவர்: ம. ப. மந்திரமூர்த்தி; துணைத் தலைவர்: எம். கே. சுப்பையா; செயலாளர்: ஆ. பால்வசுதாசன்; கூட்டுச் செயலாளர்கள்: எம். எஸ். சித்தார்த்தன்; எம். இராமச்சந்திரன்; பொருளாளர்: கே. எஸ். ஆறுமுகம்; நிர்வாகக் குழு உறுப்பினர்கள்: எஸ். எம். சுப்பையா, ஏ. எல். பெருமாள், எஸ். வள்ளிநாயகம், எஸ். சிவகுருநாதன், எஸ். தியாகராசன், பே. சு. வேலுமயில், எஸ். கனகராஜ், பி. எஸ். செல்லையா, ஏ. எஸ். ஆறுமுகம், ஆ. பாலச்சந்திரன், சி. த. மு. இர. ஆரியசங்காரன், ஆ. கமலநாதன், மா. அண்ணாமலை, வி. எஸ். பாவணசம், எஸ். எம். செல்லையா, ஏ. எஸ். செல்லையா, வி. எஸ். டி. ராஜா, எஸ். எஸ். அன்பழகன், எம். எஸ். ஆத்தியப்பா,

குற்றங்கள் கண்டுபிடிப்பு

குற்றங்களை விஞ்ஞான முறையில் கண்டுபிடிப்பதற்கென ஒரு ஆராய்ச்சி நிலையத்தை நிறுவ வேண்டுமென்று இந்திய மத்திய, மாநில சர்க்கார்களின் உள்நாட்டு மந்திரிகள் மாநாடு தீர்மானித்திருக்கிறதாம்.

வாணி கைத்தொழில் கலா மன்றம்

3—1—55ல் திருமதி சண்முகப்பிரபா அவர்கள், சென்னை-கொண்டித் தோப்பிலுள்ள வெங்கையர் தெரு, எண். 7 இல்லத்தில் மேற்கண்ட கலா மன்றத்தை டாக்டர் எஸ். தருமாம்பாள் தலைமையில் திறந்து வைத்தார். தோழர்கள் மயிலை சிவமுத்து, வேதாசலம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். அப்பள்ளியில் சங்கீதம், பல்விதவாத்தியங்கள், நடனம், தையல் மற்றும் அனேக கைத்தொழில்களும் தேர்ந்த அனுபவமிக்க ஆசிரியைகளால் கற்பிக்கப்பட்டு, சர்க்கார் தேர்வுக்கு அனுப்பப்படுவரென்றும், வகுப்புகள் அவரவர்களுக்குச் சௌகரியமான வேளைகளில் நடத்தப்படுமென்றும், வகுப்பில் சேர விரும்புவோர், சென்னை-ஆயலூர் முத்தியா முதலித் தெரு 24-ம் எண்ணுள்ள முகவரிக்கு எழுதிப் பயனடைய வேண்டுகிறோம் என்றும் பள்ளி நிர்வாகத்தினர் அறிவிக்கின்றனர்.

திராவிட இளைஞர் முன்னேற்றக்-கழகம்

26—12—54ல், சென்னை புதுப்பேட்டையிலுள்ள மேற்படி கழகச் செயற்குழு கூட்டத்தில், பொங்கல் விழாவன்று கழக இடத்தில் கொடியேற்று விழாவும் சிறுவர்களுக்கு 'பொங்கல்' வழங்குவதெனவும் முடிவு செய்யப்பட்டு பின்னர், தோழர் பி. கே. கணேசனின் விலகல் கடிதம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, தோழர் கே. ஆர். சம்மந்தம் அவர்கள் பொருளாளராகவும், தோழர் கருமேனியன் செயற்குழு உறுப்பினராகவும் நியமிக்கப்பட்டனர்.

வாணியம்பாடி விவசாயிகள் சங்கம்

6—1—55ல் நடைபெற்ற விவசாயிகள் சங்கக் கூட்டத்தில், பாலாறு அணைக்கட்டை உடனடியாகக் கட்டக் கோரியும், வாணியம்பாடி நகரில் கம்பளித் தொழிற்சாலை ஒன்று திறக்கவும் சர்க்காரைக் கேட்டுக்கொண்டும், மார்ச்சு திங்கள் முதல் வாரத்தில், சங்கப் பிரதிநிதிகள் பத்து பேர் முதலமைச்சரைச் சந்தித்து தங்கள் திட்டங்களை சமர்ப்பிப்பதெனவும், சங்க வளர்ச்சிக்கென ஜனவரி 23-ல், நாடகம் ஒன்று நடத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

அனுதாபக் கூட்டம்

வேப்பலோடை தோழர் கே. எஸ். பி. எஸ். நடராசன் இயற்கையெய்தியமைக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் அவ்வூர், மக்களில் 500 பேர் ஒன்றுதிரண்டு, மௌன ஊர்வலமாகச் சென்று, கிராமப் பொதுக் கட்டிடம் வந்தடைந்து, தோழர் வ. பெருமாள் தலைமையில் ஒரு அனுதாபக் கூட்டமும் நடத்தினர். தோழர் நடராசன் தொழிலாளருக்கும், பொது மக்களுக்கும் ஆற்றிய தொண்டுகள் குறித்துத் தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர்; தங்களது அனுதாபத்தையும் தெரிவித்துக்கொண்டனர்.

திருமணம்

பழனி தோழர் கே நடராசன்—தோழியர் காவேரி சீர்திருத்தத் திருமணம் தோழர் கருப்பசாமி தலைமையில் நடைபெற்றது. இதன் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

தலைவர் வரவேற்பில் சிறு குழந்தைகளுக்கு விபத்து

அளவுக்கு மீறின ஆர்வம் ஆபத்தாகுமென தலைவர் எச்சரிக்கை

போபால்—

இங்குள்ள, 'குழந்தைகள் பூங்கா'வில், இந்திய ஜனாதிபதி இராசேந்திரருக்கு நகர சபையினர் அளித்த வரவேற்பு வைபவம் ஒன்றின்போது, மக்கள் கூட்டத்தின் காரணமாகப் பல குழந்தைகள் காலால் மிதிபட்டுக் காயமுற்றார்களாம்! மேலும் பல குழந்தைகள் காணப்படவில்லை என்றும் புகார்கள் செய்யப்பட்டுள்ளனவாம்.

இந்த வரவேற்பில் கலந்து கொள்வதற்கென பூங்காவிற்கு வெளியே நின்று கொண்டிருந்த பொதுமக்கள் கூட்டம், சிறு குழந்தைகள் என்றுகூடப் பார்க்காமல் அவ்வளவு 'ஆர்வத்'துடன் பூங்காவிற்குள் நுழைய முயன்ற போதுதான் இச்சம்பவம் நடைபெற்றதாம்.

இத்தனைக்கும், பலத்த போலீஸ் பந்தோபஸ்துகளும் வேண்டிய அளவு அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது என்றும் கூறப்படுகிறது.

பொதுமக்கள் ஏற்படுத்திய இந்தக் குழப்பத்தைக் கண்டு கோபமடைந்த ஜனாதிபதி இராசேந்திரர், தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு இதழ் வாசித்து முடிக்கப்பட்டதும் உடனே கூட்டத்தை விட்டு வெளியேறிவிட்டாராம்.

அவ்வாறு வெளியேறுமுன் அவர் பேசுகையில், தம்மை வரவேற்க வந்திருக்கிறோம் என்ற நினைப்பை பொதுமக்கள் அடியோடு மறந்துவிட்டு, கூட்டத்தில் குழப்பத்தை உண்டு பண்ணுவதில்தான் இறங்கிவிட்டனர் என்றும், ஆர்வமும், உற்சாகமும் ஒரு எல்லைக்குள் அடங்கியிருப்பதே நல்லதென்றும், அளவுக்கு மீறின ஆர்வம் எப்போதும் ஆபத்தில்தான் கொண்டு போய் விடுமென்றும் அவர் கடிந்துரைத்திருக்கிறார்.

பி. சோ. கட்சி

மூன்று பிரதேசமாகப் பிரிக்கப்படுகிறது

நாகபுரி, ஜன. 6—

இந்தியப் பிரஜா—சோஷலிஸ்டு கட்சியின் அமைப்பு, மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பிரிவிற்கும் ஒரு கூட்டுச் செயலாளர் நியமிக்கப்படுவார் என்று தெரிகிறது.

கட்சியைத் திருத்தி அமைப்பதற்காக ஒவ்வொரு பிரிவிற்கும் பி-சோ. கட்சித் தலைமைப் பீடத்தில் உள்ள முதிர்ச்சியடைந்தவர்கள் நியமிக்கப்படுவார்கள்.

கிழக்கு, மத்தியப் பிரிவுகளில் அசாம், திரிபுரா, ஒரிசா, வங்காளம், பீகார், உ. பி., மத்தியப்பிரதேசம் ஆகிய இப்பகுதிகள் அடங்கியிருக்குமாம். இப்பகுதியின் பொறுப்பு, பிபின் பால் தாஸ் என்பவரிடம் ஒப்படைக்கப்படுமெனவும் தெரியவருகிறது. இப்பிரிவிற்குக் கல்கத்தா தலைமை நகரமாக இருக்குமாம்.

வடக்குப் பிரிவில் டில்லி, பஞ்சாப், இமாசலப் பிரதேசம், மத்திய பாரத், விந்தியப் பிரதேசம், பெப்சு, ராஜஸ்தான், காஷ்மீர் ஆகிய பகுதிகள் அடங்கியிருக்குமாம். பரிதுல் அன்சாரி என்பவர், இப்பிரிவின் பொறுப்பை ஏற்பார் என்று தெரிகிறது. இதன் தலைமை அலுவலகம் டில்லியில் இருக்கும்.

மேற்குப் பிரிவில் பம்பாய் நகரம், குஜராத், சௌராஷ்டிரம், மகாராஷ்டிரம், கர்நாடகம், ஐதராபாத், மைசூர், ஆந்திரா, தமிழ்நாடு, திரு-கொச்சி ஆகிய பகுதிகள் அடங்கியிருக்குமாம். இப்பிரிவு எம். ஆர். தன்வத்தேயிடம் ஒப்படைக்கப்படும் என்றும், இதன் தலைமை அலுவலகம் பம்பாயில் இருக்குமெனவும் தெரிகிறது.

கட்சியின் உத்தரவுகள் அனைத்தும் டில்லியிலிருக்கின்ற மத்திய அலுவலகத்திலிருந்துதான் பிறப்பிக்கப்படுமென்றும், ஆனால் கட்சிக் கிளைகளின் அறிக்கைகள் யாவும் பிரதேச தலைமை நிலையத்துக்கே அனுப்பப்படவேண்டும் என்றும் முடிவாகியிருப்பதாகத் தெரிகிறது.

5,000 தொழிலாளர் வேலை நிறுத்தம்

கல்கத்தா, ஜன. 10—

'ரிவர் ஸ்டீம் நாவிகேஷன்' எனும் கம்பெனியைச் சேர்ந்த சுமார் 5,000 தொழிலாளர்கள், தங்கள் கோரிக்கைகளை வற்புறுத்தி நேற்று மாலை, கல்கத்தா துறைமுகத்தில் வேலை நிறுத்தம் செய்திருக்கின்றனர். வங்காள கப்பலோட்டிகள் யூனியனும், இவ்வேலை நிறுத்தத்தை மேற்கொள்ளும்படி அறிவித்து விட்டிருக்கிறது.

தங்கள் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரையில், இவர்கள் வேலை நிறுத்தம் செய்வார்களாம்.

சட்ட விரோதமாகத் தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்குவது, தொழிற் சங்க நடவடிக்கைகளில் அனாவசியமாக முதலாளிகள் தலையிடுவது போன்ற நடவடிக்கைகள் தடுக்கப்பட வேண்டுமென தொழிலாளர்கள் கோருகின்றனர்.

மின்சார ஊழியர்கள் வேலை நிறுத்தம்

சமரசத்திற்கு முயற்சி?

பெங்களூர், ஜன. 9—

மைசூர் மாநில மின்சார ஊழியர்கள் நடத்திவரும் வேலை நிறுத்தத்தின் காரணமாக இந்நகரில் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது நினைவிலிருக்கலாம். அத்தடையுத்தரவை மீறி பெங்களூர் சிற்றுண்டிச்சாலை தொழிலாளர் யூனியனின் துணைத் தலைவரான என். பி. ஆஞ்சநேயலு என்பவரும், மற்றும் இரண்டு மின்சார இலாகா ஊழியர்களும், தடை உத்திரவை மீறி மின்சார இலாகா ஊழியர்களடங்கிய சிறிய ஊர்வலமொன்று நடத்தினார்கள் என்ற காரணத்திற்காகக் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருக்கின்றனர்.

இவ்வேலை நிறுத்தம் பற்றி, மைசூர் மாநில சட்டசபை எதிர்க்கட்சித் தலைவரும், பி.-சோ கட்சியினருமான முமகமது இமாம், மைசூர் முதலமைச்சர் அனுமந்தையாவைச் சந்தித்துப் பேசி இருக்கிறார். அனேகமாக வெகுவிரைவில் ஒரு நியாயமான நல்ல முடிவு செய்யப்படலாம் என்பது, அவர்களிடையே நடைபெற்றுள்ள பேச்சுவார்த்தைகளின் பிரதிபலிப்பாகக் காணப்படுகிறதாம்.

மின்சார இலாகா ஊழியர்களின் இந்த வேலை நிறுத்தத்திற்குத் தங்கள் ஆதரவைத் தரும் வகையில் பெங்களூர் நகரிலுள்ள முப்பதுக்கும் மேற்பட்ட தொழிற் சங்கங்கள் ஒன்றுகூடி, இம்மாதம் 15-ந் தேதியன்று 'கண்டன தினம்' மேற்கொள்வதென்றும், அன்று கண்டனப் பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள் நடத்துவதெனவும் முடிவு செய்திருக்கின்றன.

நைரோபி, ஜன. 7—

கெனியா மலைப்பகுதிகளிலுள்ள 'மாவ் மாவ்' இயக்கத்தினரின் தலைவரான பீல்டு மார்ஷல் கலேபா நேற்றிரவு கெனிய சர்க்காரால் தூக்கிலிடப்பட்டுவிட்டார் என்று அறியவருகிறது.

கைத்தறி விற்பனை

ஜன. 11, 12-ந் தேதிகளில் தில்லையில், தி. மு. கழகத் தோழர்கள், கைத்தறித் துணிகளை வீதி தோறும் விற்பனை செய்வார்கள்.

வேண்டுகோள்

"தில்லை வட்ட தி. மு. கிளைக் கழகத் தோழர்கள் அனைவரும் தில்லைக்கு வந்து, வட்டக் கழகத்தினருடன் கலந்துகொண்டு துணி விற்பனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்," என்று, தில்லை வட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் சக்கரவர்த்தி கேட்டுக்கொள்கிறார்.

தாய்மார் கழகம்

11—1—55 பிற்பகல் 2-30 மணிக்கு, சென்னை, முத்துகிருஷ்ணன் தெரு, 15-ம் எண்ணுள்ள இல்லத்தில் நடைபெறும் திருக்குறள் வகுப்பில், 'தீவினை அச்சம்' என்பது குறித்து தோழர் மயிலை சிவமுத்து, தோழியர்கள் க. தோ. சிவகாமசுந்தரி, ஆர். சுந்தராம்பாள் ஆகியோர் பேசுவர்.

மறைவு நாள் கூட்டம்

11—1—55 மாலை 6 மணிக்கு, ஆற்காட்டில், தோழர் மணிஎழிலன் தந்தையார் ஆசிரியர் ஆனந்தம் அவர்களின் மறைவு நாள் கூட்டம் நடைபெறும். தோழர் வைத்தியலிங்கம் தலைமையில் தோழர்கள் இளஞ்செழியன், கருத்தோவியன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

சொற் பயிற்சிக் கூட்டம்

12—1—55 மாலை 6 மணிக்கு, சென்னை 5-வது வட்ட தி. மு. கழகக் கட்டிடத்தில், தோழர் வெ. கி. பார்த்தசாரதி தலைமையில் 'தமிழகத்தின் வளமும் தொன்மையும்' என்னும் பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

சேலம் திருவள்ளுவர் கழகம்

12—1—55 மாலை 6 மணிக்கு, சேலம் நகராண்மை உயர்நிலைப் பள்ளியில், தமிழ்த் திருநாளையொட்டி திருக்குறள் பேச்சுப் போட்டி நடைபெறும்.

மேற்கு வங்கத்தில் 2,000 விவசாயிகள் கைது

1,000 பேர்கள் கைதாகியுள்ளனர் என்று போலீசார் அறிவிப்பு

கல்கத்தா, ஜன. 8—

மேற்கு வங்கத்தில் உள்ள 24 பர்காணக்கள் என்னும் பிரதேசத்தில் டிசம்பர் திங்கள் முதல் விவசாயிகள் கிளர்ச்சி நடைபெற்று வருகிறதாம்.

இக்கிளர்ச்சியின் காரணமாக இதுவரை 2,000-க்கு மேற்பட்ட விவசாயிகள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர் என்று தெரிகிறது.

இச்செய்தியை மேற்கு வங்க கிசான் சபையைச் சேர்ந்தவரும் சட்டசபை உறுப்பினருமான பங்கிம் முக்கர்ஜி கூறியுள்ளார்.

நிலப்பிரபுவுக்கும், விவசாயிகளுக்கும் இடையே உள்ள 'ஜோதிதார்கள்' என்னும் இடைத் தரகர்களின் புகார்பேரில் போலீசார் இதுவரை 2,000 விவசாயிகளைக் கைது செய்துள்ளனர் என்று அவர் மேலும் கூறினார்.

இந்த அறுவடை காலத்தில் பர்காநார் சட்டத்தை மீறியதாகவும், கலகம் செய்ததாகவும், விவசாயிகள், ஜோதிதார்கள் எனப்படுவோர் உள்பட இதுவரை 1,000 பேரைக் கைது செய்திருப்பதாக போலீசார் தெரிவித்தனர்.

அறுவடையாகும் தானியத்தைப் பகிர்ந்துகொள்வது பற்றி சச்சரவு எழுந்துள்ளதாம்.

திரு - கொச்சியில் மீண்டும் பொதுத் தேர்தல்?

ஆலப்புழை, ஜன. 9—

"திரு-கொச்சி மாநில ஆட்சி ஒரு நிலையான முறையில் இல்லாதிருப்பதால் நிச்சயமாக மற்றொரு மாநில பொதுத் தேர்தல் நடைபெறும்,"

என்று மாநில காங்கிரஸ் குழுத் தலைவர் கே. பி. மாதவன் குறிப்பிட்டிருக்கிறார்.

இலங்கை இந்தியர் நிலைமையில் பேரிடி!

இலங்கைக் குடி உரிமைக்காக மனுச் செய்துள்ள சுமார் 8,75,000 இந்தியர்களில் பெரும்பாலானவர்களின் மனுக்கள் நிராகரிக்கப்பட்டு விடுமென, இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவராக நியமிக்கப்பட்டிருக்கும் எட்வின் விசயரத்னு தெரிவித்திருக்கிறார்.

ஏற்கனவே இலங்கையர் என 'பாஸ்போர்ட்'டுகள் வைத்துள்ளவர்கள் மொத்தம் 1 லட்சம் இந்தியர்கள் இருக்கின்றனர் என்றும், அவர்கள் எவ்விதக் கவலையும் எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை என்றும் அவர் கூறினார்.

இலங்கைக் குடியுரிமை மறுக்கப்பட்டவர்கள் எல்லோரையும் இந்தியக் குடி மக்களாகப் பதிவு செய்து கொள்ளுமாறு இலங்கை சர்க்கார் தூண்டிவிடுவதற்கான ஏற்பாடுகளையெல்லாம் மேற்கொள்ளலாம் என்றும் அவர் கருத்தறிவித்திருக்கிறார்.

ஈராக்—ரஷ்யா உறவு துண்டிப்பு

ஈராக்கில் உள்ள தனது தூதுவர்களை திருப்பி அழைப்பது என்று ரஷ்யா முடிவு செய்திருக்கிறதாம்.

நட்புறவுக்குப் புறம்பான முறையில், ரஷ்யாவிடம் ஈராக் நடந்துகொள்வதே இந்த முடிவுக்கு காரணம்என்றுகூறப்படுகிறது. ராஜீயத் தொடர்புகளைத் துண்டித்துக் கொள்வதென்ற முடிவை இன்று ஈராக் வெளிநாட்டிலாகாவிடம் ரஷ்யா குறிப்பு ஒன்றின் மூலமாகத் தெரிவித்தது.

இந்த முடிவிற்கான பொறுப்பு அனைத்தும் ஈராக் சர்க்காரைச் சேர்ந்ததே என்று ரஷ்யா தெரிவித்தது.

பொருளாதார நிலை காரணமாக மாஸ்கோவில் உள்ள தனது தூதுவராலயத்தை மூடுவதாக கடந்த நவம்பர் மாதத்தில் ஈராக் ரஷ்யாவிடம் தெரிவித்தது.

ஈராக்கில் உள்ள கம்யூனிஸ்டுகள்மீது நேரடியாக ஈராக் சர்க்கார் போர் தொடுத்திருப்பதாக ரஷ்ய வெளிநாட்டிலாகா குற்றம் சாட்டியது.

பட்டதாரிகளை உற்பத்தி செய்யும் 'இயந்திரங்'களா கலாசாலைகள்?

மாணவர்கள் ஆங்கில மொழியைப் புறக்கணிக்கக் கூடாது என்கிறார் முன்ஷி!

"நமது நாட்டிலுள்ள கல்வி நிறுவனங்களில் ஆங்கில மொழி கற்பிக்கப்படக்கூடாதென்னும் வாதத்தை நான் ஏற்றுக் கொள்ளமாட்டேன்; பல்கலைக் கழகங்கள் யாவும் 'கல்விக் கோயில்'களாக இயங்க வேண்டுமேயன்றி, பட்டதாரிகளை உற்பத்தி செய்கின்ற 'இயந்திரச்சாலை'களாகிவிடக் கூடாது.

"ஒவ்வொரு கல்வி நிறுவனத்திலும், மற்ற மொழிகளுடன் ஆங்கில மொழி கண்டிப்பாகக் கற்பிக்கப்பட்டே ஆக வேண்டும்.

"உலகத்தின் குடிமகனாக வாழ விரும்புகிற ஒவ்வொரு மாணவனும் ஆங்கில மொழியைப் புறக்கணித்துவிடக் கூடாது."

இவ்வாறு, பம்பாய் பாரதீய வித்தியாபவன் கல்லூரியின் ஆண்டு விழாவுக்குத் தலைமை தாங்கிப் பேசிய உத்திரப் பிரதேச கவர்னரான கே. எம். முன்ஷி, தனது உரையின்போது குறிப்பிட்டிருக்கிறார்.

பாங்கி சிப்பந்திகள் ஊழியர் சங்க முடிவு

ஐதராபாத், ஜன. 9—

பாங்கி ஊழியர்கள் நடத்தவிருப்பதாக இருந்த வேலை நிறுத்தத்தை நிறுத்திவைப்பது என்று மத்திய வேலை நிறுத்தக் குழுவினர் செய்துள்ள முடிவு அகில இந்திய பாங்கி ஊழியர் சங்கத்தினரின் விசேடக் கூட்டமொன்றில் ஊர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது.

ராஜாத்தியட்சா குழுவினரின் விசாரணையில் கலந்து கொள்வதென்று முடிவு செய்ததோடு, இந்திய அரசாங்க பாங்கி அமைக்க வேண்டுமென்ற மத்திய சர்க்காரின் ஆலோசனையையும் வரவேற்று அக்கூட்டத்தில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

2 பெண்கள் உள்பட 8 பேர் கொலை

பர்மிய பயங்கரவாதிகளின் செயல்

ரங்கூன், ஜன. 4—

வடக்கு பர்மாவில் பர்மிய குடியரசு நாளன்று பல இடங்களில் ரயில் பாதைகள் நாசப்படுத்தப்பட்டிருந்தனவாம். பயங்கரவாதிகள் இப்படி நாசம் விளைவித்திருக்கின்றனராம்.

ஒரு இடத்தில் பயங்கரவாதிகள் ஆறு போலீஸ்காரர்களையும் இரண்டு பெண்களையும் கொன்றதுடன், நான்கு போலீசாரையும், இரண்டு குழந்தைகளையும் படுகாயப்படுத்தினார்களாம்.

மற்றோர் இடத்தில் இரங்கூன் நோக்கி வந்த "கூட்ஸ் வண்டி" ஒன்று வெடிகுண்டுத் தாக்குதலுக்கு உள்ளாகியதாம். இதனால் வண்டியின் டிரைவரும், 'கிளீன'ரும் காயமுற்றனர்.

மாந்தலே அருகில் ஒரு வண்டியை பயங்கரவாதிகள், வெடிகுண்டினால் தாக்கினார்களாம்.

பணிபுரியும் மகளிர் தொழிற் சங்கம்

குஜராத்தில் வேலைக்குச் செல்லும் பெண்கள் தங்கள் நலனுக்கென தனியாக 'குஜராத் மகிளகம்தார் யூனியன்' என்றொரு சங்கத்தை ஆரம்பித்துள்ளனர். பம்பாய் மாநிலத்திலேயே பெண்கள் சங்கம் ஏற்படுவது இதுதான் முதல் தடவை என்று சொல்லப்படுகிறது.

ஊர்ஜிதம்!

ஆலப்புழை, ஜன. 9—

திரு-கொச்சி மாநில பி.-சோ. கட்சி சர்க்கார் ஆட்சிக்கு இதுவரை அளித்து வந்த பொதுவான ஆதரவுகளையும் ஒத்துழைப்பையும் நிறுத்திக்கொள்வது என்று பிரதேச காங்கிரஸ் குழுவினர் செய்துள்ள முடிவொன்றை, இங்கு நடைபெற்ற திரு-கொச்சி மாநில காங்கிரஸ் அரசியல் மாநாடு ஊர்ஜிதம் செய்து முடிவாக்கியுள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.,